


புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






## பிரதமர் மோடியின் அமெரிக்கப் பயணம் இரு தரப்பு உறவை மேலும் ஆழப்படுத்தும்

# வெள்ளை மாளிகை

## வெளிப்படையான இந்தோ - பசிபிக் பகுதியை உறுதிப்படுத்தவும், உலகளாவிய சவால்களை கூட்டாகச் சமாளிக்கவும் அமெரிக்கா ஒத்துழைப்பு அளிக்கும்



**வாஷிங்டன், ஜூன். 23-**
**பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்கப் பயணம், இரு நாடுகளுக்கு இடையேயான நெருக்கமான ஒருங்கிணைப்பை மேலும் ஆழப்படுத்தும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.**


பிரதமர் மோடி, மூன்று நாள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ள நிலையில், அவரது இந்த பயணம்இருதரப்புஉறவில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து வெள்ளை மாளிகை மூத்த அதிகாரி ஒருவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

அவர் கூறியதாவது: "பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்கப் பயணம் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஆழமான மற்றும் நெருக்கமான உறவை மேலும் வலுப்படுத்தும். அமெரிக்கர்களையும் இந்தியர்களையும் ஒன்றாக இணைக்கும். சுதந்திரமான, வெளிப்படையான, வளமான, பாதுகாப்பான இந்தோ - பசிபிக்குக்கான இரு நாடுகளின் உறுதிப்பாட்டை இந்தப் பயணம் வலுப்படுத்தும். மேலும், பாதுகாப்பு, தூய்மையான எரிசக்தி, விண்வெளி உள்ளிட்டவற்றில் தொழில்நுட்ப உறவை உயர்த்தும்.

இந்தோ - பசிபிக் பகுதியில் உலகின் மிகப் பழமையான மற்றும் மிகப் பெரிய ஜனநாயக நாடுகளாகவும், பாதுகாப்பை வழங்குவதில் முக்கியப் பங்கு வகிக்கும் நாடுகளாகவும் அமெரிக்காவும், இந்தியாவும் உள்ளன. வரும் காலங்களில் அமெரிக்காவுக்குஇந்தியா மிக முக்கியமான நாடாக இருக்கும். கல்வி மற்றும் இரு நாட்டு மக்களுக்கு இடையேயான உறவை விரிவுபடுத்துவது குறித்தும், பருவநிலை மாற்றம் உள்ளிட்ட பொதுவான சவால்களை எதிர்கொள்ள ஒன்றிணைந்து செயல்படுவது குறித்தும் அதிபர் ஜோ பைடனும், பிரதமர் நரேந்திர மோடியும் விவாதிப்பார்கள்.

குவாட் அமைப்பின் மூலம், இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இணைந்துள்ளன. ஒரு வலுவான கடல்சார் ஜனநாயகமாக 4 நாடுகளும் பரஸ்பர நலனை மேம்படுத்த பணியாற்றுகிறோம். செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் கம்ப்யூட்டிங், சுத்தமான எரிசக்திக்கான தொழில்நுட்பங்கள், செமிகண்டக்டர், சுகாதாரம், உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றில் அமெரிக்காக்கு இந்தியா மிகவும் முக்கியம்.

அமெரிக்க - இந்திய உறவு பல ஆண்டுகளாக வலுப்பட்டு வருகிறது. தற்போது அது முன்னெப்போதையும் விட வலுவாகஇருக்கிறது. வெளிப்படையான இந்தோ-பசிபிக்பகுதியை உறுதிப்படுத்தவும், உலகளாவிய சவால்களை கூட்டாகச் சமாளிக்கவும் அமெரிக்கா ஒத்துழைப்பு அளிக்கும். ஒருமித்த எண்ணம் கொண்ட நாடுகளுடன் இணைந்து வெளிப்படையான, வளமான, பாதுகாப்பான, நிலையான மற்றும் நெகிழ்ச்சியான உலகத்தை உருவாக்குவதை நோக்கி இரு நாடுகளும் செயல்படும்" என்று அந்த அதிகாரி கூறினார்.



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமை செயலகத்தில், மாநில சட்ட ஆணையத்தின் தலைவர் நீதிபதி நாகப்பன், உறுப்பினர்கள் நீதிபதி ஆதிநாராயணன், தீனதயாளன் ஆகியோர் சந்தித்து பேசினார்கள்.

## வள்ளலார் குறித்த ஆளுநரின் கருத்துகள் முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டியவை அமைச்சர் தங்கம் தென்னரசு



**சென்னை, ஜூன். 23-**
**வள்ளலார் குறித்த ஆளுநரின் கருத்துகள் முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டியவை என்று அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.**

வள்ளலாரின் 200-வது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு பேசிய தமிழக ஆளுநர் ரவி, பத்தாயிரம் ஆண்டு சனாதன தர்மத்தின் உச்ச நட்சத்திரம் வள்ளலார் என்று பேசியிருந்தார். சனாதன தர்மத்தை எதிர்த்த வள்ளலாரை சனாதன தர்மத்துக்கு ஆதரவாளராக ஆளுநர் பேசியிருப்பதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது.

இது தொடர்பாக தமிழக நிதி, மின்சாரம் மற்றும் மனிவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "சமரச சுத்த சன்மார்க்க நெறிக்கும், சனாதன தர்மத்துக்குமான அடிப்படை வேற்றுமையைக் கூட அறிந்து கொள்ளாமல், வடலூர் வள்ளல் பெருமாள் வழிகாட்டிய நெறிமுறைகளை முற்றிலும் சிதைத்து சனாதனப் போர்வைக்குள் சன்மார்க்க நெறியினைப் புகுத்தும் முயற்சியில், "தாம ரட்சராகப்" புதிய அவதாரம் மேற்கொண்டிருக்கும் தமிழக ஆளுநர் ஈடுபட்டிருக்கிறார்.

தமிழ்ப் பண்பாடும் - விழுமியங்களும் தனித்தியங்கும் தன் இயல்பினைக் கொண்டவை என்பதை பல்லாயிரமாண்டு தமிழ்ச் சமூக நாகரீகச் சுவடுகள் நமக்கு வெள்ளிடை மலையாக உணர்த்தி இருக்கின்றன. மத்திய அரசின் "தனிப்பெருங் கருணை" ஏதோ ஒரு விதத்தில் வாய்க்கப் பெற்றுவிட்டதாலேயே ஆளுநர் மாளிகையை சனாதனக் கூடாரமாக மாற்றும் ஆளுநரின் கருத்துகள் முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டியவை." இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

## கிராமப்புறங்களிலும் வாசிப்பு பழக்கத்தை உருவாக்க வேண்டும் புதுக்கோட்டை கலெக்டர் மெர்சி ரம்யா விருப்பம்



**புதுக்கோட்டை, ஜூன். 23-**
6 ஆவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழா தொடர்பான முதல் வரவேற்புக்குழு கூட்டத்தில் பங்கேற்ற புதுக்கோட்டை கலெக்டர் மெர்சி ரம்யா கிராமப்புறங்களிலும் வாசிப்பு பழக்கத்தை உருவாக்க வேண்டும் என தனது விருப்பத்தை தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் இணைந்து 6ஆவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவை ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 6 வரை புதுக்கோட்டை நகர்மன்றத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

புத்தகத் திருவிழாவிற்கான முதல் வரவேற்புக்குழு கூட்டத்திற்கு புத்தகத் திருவிழா தலைவரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான மெர்சி ரம்யா தலைமைதாங்கினார். அறிவியல் இயக்க மாவாட்டத்தலைவர் எம். வீரமுத்து வரவேற்றுப்பேசினார். கடந்த புத்தகத் திருவிழா அனுபவங்கள் குறித்து கவிஞர் தங்கம்மூர்த்தி பேசினார். வாசிப்பின் அவசியம் குறித்து ஆதிதிராவிட நலத்துறை மாவட்ட அலுவலர் கருணாகரன், மாவட்ட மையநூலகர் சிவக்குமார், புத்தகத்திருவிழா ஏற்பாடுகள் குறித்து கவிஞர் நா.முத்துநிலவன், அரங்கு மற்றும் பதிப்பகங்கள் குறித்து மாநிலச்செயலாளர் எஸ்.டி.பாலகிருஷ்ணன், மாவட்ட நிர்வாகப்பணிகள் குறித்து அ.மணவாளன் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர்.

முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் கே.ராசு, மேனாள் முதன்மைக் கல்வி அலுவலர் சாமி சத்யமூர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) தமிழ்செல்வி ஆகியோர் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர். மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா 6ஆவது புத்தகத் திருவிழாவிற்கான பதாகையை வெளியிட்டு பேசுகையில்:- "புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவை இந்த ஆண்டு மிகச் சிறப்பாக நடத்த மாவட்ட நிர்வாகத்தின் அனைத்து துறைகளும் முனைப்போடு செயல்படும். பள்ளி, கல்லூரிகளில் மட்டுமல்லாமல் கிராமப்புறங்களிலும் வாசிப்பு பழக்கத்தை உருவாக்க வேண்டும். படித்த அறிவு மேலும் செழுமையடைய புத்தக வாசிப்பு மிக அவசியம். வாசிப்பு நமது வாழ்க்கைக்கு எப்போதும் துணையாக இருக்கும். புத்தகத் திருவிழாவை நாம் அறிவுத்திருவிழாவாக நடத்துவோம். 100 அரங்குகள் அமைக்கபடவுள்ளது. குழந்தைகளுக்கான சிறப்பு அரங்குகள் அமைக்கப்படவுள்ளது. அனைத்துஒன்றியங்களில் இருந்தும் பொதுமக்கள், ஆசிரியர்கள்,மாணவர்கள், எழுத்தாளர்கள் அனைவரும் பங்கேற்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் செல்வி, மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை இயக்குநர் கவிதப் பிரியா, மகளிர் திட்ட இயக்குநர் ரேவதி, ஒருங்கிணைப்பாளர்கள் ராசி பன்னீர்செல்வன், கீதா மற்றும் அரசுத்துறை அலுவலர்கள், அறிவியல் இயக்க பொறுப்பாளர்கள் என 100க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். மாவட்டச் செயலாளர் எம்.முத்துக்குமார் நன்றி கூறினார்.

### வேறு இடத்தை தேர்வு செய்ய ஆம் ஆத்மி கோரிக்கை

புதுக்கோட்டை மாவட்ட, நகர மக்கள் சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு கோரிக்கை என்று சமூக வலைதளத்தில் ஆம் ஆத்மி கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது அதில் கூறியிருப்பதாவது:

இந்த முறை புத்தக திருவிழாவை நகர் மன்றத்தில் வைக்க கூடாது என்று கோரிக்கை வைக்கிறோம். அருகே உள்ள அப்பர் பிரைமரி அரசு பள்ளி மாணவர்களுக்கு போதிய வகுப்பறை இல்லாத நிலையில் இங்கே தான் வகுப்புகள் நடை பெறுகிறது இப்படி இருக்கும் பச்சத்தில் நகர் மன்றத்தில் புத்தக திருவிழா நடத்தினால் அப்பர் பிரைமரி அரசு பள்ளியில் பயிலும் 800 மேற்பட்ட மாணவர்களின் கல்வி பாதிப்படையும் ஆகவே மாற்று இடத்தில் புத்தக திருவிழாவை நடத்த வேண்டும் என்று அரசு பள்ளியில் பயிலும் மாணவர்கள், பெற்றோர் சார்பாக புதுக்கோட்டை ஆம் ஆத்மி கட்சி கேட்டுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆலங்குடியில் அரசு மதுபான கடை மூடல் பட்டாசு வெடித்து மாலை அணிவித்து கொண்டாடிய பொதுமக்கள்






**ஆலங்குடி, ஜூன். 23-**
ஆலங்குடியில் நேற்று அரசு மதுபான கடை மூடப்பட்டதை அப்பகுதி மக்கள் பட்டாசு வெடித்து கொண்டாடினர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் தபால் நிலையம் அருகே மதுபான கடை செயல்பட்டு வந்தது. மதுபான கடையால் பள்ளி மாணவர்களுக்கும் வேலைக்கு செல்பவர்களுக்கும் பாதிப்பு ஏற்படுவதாகவும் இந்தக் கடையை மூடக்கோரி ஆலங்குடி அம்பேத்கர் நகர் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சியினர் சாலை மறியலில் ஈடுபட்டும் தொடர் போராட்டங்கள் செய்து வந்தனர்.

இந்நிலையில் தமிழக அரசு நேற்று முன்தினம் தமிழகத்தில் 500 மதுபான கடைகள் உடனடியாக மூடப்படுவதாக அறிவித்திருந்தது. அதன்படி ஆலங்குடி தபால் நிலையம் அருகே உள்ள மதுபான கடை மூடப்படுவதாக அறிவித்தனர். இதை அறிந்த அப்பகுதி பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். நேற்று மதியம் மூடப்பட்ட மதுபான கடையின் முன்பு தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக பட்டாசுகள் வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர். மதுபானக் கடையை மூடிய தமிழக அரசுக்கும், எங்களுடன் போராடிய அரசியல் கட்சி பிரமுகர்களுக்கும் அப்பகுதி மக்கள் தங்களது நன்றியை தெரிவித்ததுடன் மூடப்பட்ட கடைக்கு மாலையும் அணிவித்தனர்.

## அரசு பள்ளி மாணவர்களுக்கு இலவச பாட புத்தகங்கள் வழங்கல்




**தென்காசி, ஜூன். 23-**
தென்காசி மாவட்டம்- புளியங்குடி நகர திமுக கழக சார்பில் நகர செயலாளர் எ.அந்தோணிசாமி தலைமையில், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளரும், சங்கரன்கோவில் எம்எல்ஏ ராஜா ஈஸ்வரன் முன்லையில் புளியங்குடி நகர 8-வது வார்டு முப்புடாதி அம்மன் கோவில் தெருவில் உள்ள நகராட்சி துவக்கப்பள்ளியிலும், 17வது வார்டு முத்து தெரு அருகில் உள்ள நகராட்சி துவக்க பள்ளியிலும் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு இலவச புத்தகப் பை, கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் எட்டாவது வார்டு நகர் மன்ற உறுப்பினர் சமுத்திரம், 17-வது வார்டு விக்ரம் மணிகண்டன் மற்றும் தலைமை செயற்குழு உறுப்பினர் யு. எஸ். டி. சீனிவாசன் தலவன்கோட்டை கூட்டுறவு சங்க தலைவர் விஜயா பாண்டியன், சேக் மைதீன், ஜேகே மற்றும் பள்ளி தலைமை ஆசிரியை, ஆசிரியைகள், பள்ளி குழந்தைகள் வார்டு செயலாளர்கள், வார்டு கவுன்சிலர்கள், நகரக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# பள்ளிகளில் தண்ணீருடன் கழிவறை வசதி இந்திய கம்யூனிஸ்ட் கூட்டத்தில் தீர்மானம்

புதுக்கோட்டை, ஜூன். 23–

**பள்ளிகளில் தண்ணீருடன் கழிவறை வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி புதுக்கோட்டை மாவட்ட கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.**



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட நிர்வாக குழு ஒன்றிய செயலாளர் கூட்டம் புதுக்கோட்டை வடக்கு ராஜ வீதியில் உள்ள கட்சி அலுவலகத்தில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எம். மீரா மைதீன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட செயலாளர் த.செங்கோடன் அரசியல் நிலை குறித்து பேசினார். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மாவட்டத்தில் இயங்கி வரும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் போதுமான அளவில் தண்ணீர் வசதியுடன் கழிவறைகள் உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். மாணவர் விடுதிகளில் தரமான உணவு தேவையான குடிநீர் வழங்கிட வேண்டும், மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கிட வேண்டும், மாவட்ட அளவில் விளையாட்டு பயிற்சியில் ஈடுபடும் மாணவர்களுக்கு தனியாக தங்கும் விடுதிகள் அமைத்து கொடுக்க வேண்டும், ஏற்கனவே வழங்கப்பட்ட நில பட்டாக்களை கணக்கில் ஏற்ற வேண்டும்.

100 நாள் வேலை திட்டத்தில் கூலி பணத்தைபணியாளருக்கு எந்த வங்கியில் கணக்கு உள்ளதோ அந்தவங்கிகணக்கு எண்ணுக்கு அனுப்பவேண்டும். உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் கே.ஆர்.தர்மராஜன், ஏ.ராஜேந்திரன் பொருளாளர் என்.ஆர்.ஜீவானந்தம், நிர்வாக குழு உறுப்பினர்கள் ஏ.எல். ராஜு, எஸ்.ராஜேந்திரன், ஏ.ஜேசுராஜ்,கே.ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் ரங்கராஜ், ராதாகிருஷ்ணன், நாகராஜ், திலகர், சாமிக்கண்ணு, காமாட்சி, தமிழ்வாணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### அசாமில் கடும் வெள்ளப்பெருக்கு

# 10 மாவட்டங்களைச் சேர்ந்த 1.2 லட்சம் பேர் பாதிப்பு

கவுகாத்தி, ஜூன். 23–

அசாமில் பெய்து வரும் கனமழை காரணமாக 10 மாவட்டங்களைச் சேர்ந்த 1.2 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.



அசாமில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், மாநிலத்தின் பல்வேறு பகுதிகள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், மழை மேலும் தீவிரமடைந்துள்ளது. இதையடுத்து, அடுத்த 48 மணி நேரத்துக்கு மிக கனமழை பெய்யும் என அறிவித்துள்ள இந்திய வானிலை ஆய்வு மையம், மக்கள் எச்சரிக்கையுடன் இருப்பதற்கான ஆரஞ்ச் அலர்ட் விடுத்துள்ளது.

பக்சா, பர்பேடா, டர்ராங், தேமாஜி, துப்ரி, கோக்ரஜார், லக்கிம்பூர், நல்பாரி, சோனித்பூர், உதால்குரி ஆகிய 10 மாவட்டங்கள் கன மழையால் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், இம்மாவட்டங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 19 ஆயிரத்து 800 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாநில பேரிடர் நிர்வாக ஆணையம் அறிவித்துள்ளது. குறிப்பாக நல்பாரி மாவட்டம் அதிக அளவில் பாதிக்கப் பட்டுள்ளதாகவும், இங்கு மட்டும் 45 ஆயிரம் பேர் பாதிக்கப் பட்டிருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. பக்சா மாவட்டத்தில் 26,500 பேரும், லக்கிம்பூரில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரும் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கன மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக 5 மாவட்டங்களில் 14 நிவாரண முகாம்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளதாகவும், அவற்றில் 2,091 பேர் தங்க வைக்கப் பட்டுள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது. மேலும், 5 மாவட்டங்களில் 17 நிவாரண விநியோக மையங்கள் அமைக்கப் பட்டுள்ளதாகவும் அது அறிவித்துள்ளது.

"மழை வெள்ளத்தில் இருந்து மக்களை காக்கும் நோக்கில் ராணுவம், துணை ராணுவம், தேசிய பேரிடர் மீட்புப் படை, மாநில பேரிடர் மீட்புப் படை, தீ அணைப்புத் துறை, வருவாய்த் துறை உள்ளிட்டோர் களத்தில் உள்ளனர். மழை வெள்ளத்தில் சிக்கிய 1,280 பேர் இதுவரை மீட்கப்பட்டுள்ளனர். தற்போதைய நிலையில், 780 கிராமங்கள் மழை நீரில் மூழ்கி உள்ளன. 10 ஆயிரத்து 591 ஹெக்டேர் விளைநிலங்கள் நீரில் மூழ்கி உள்ளன. பிரம்மபுத்திரா ஆற்றின் கிளை நதியான பெக்கி மூன்று இடங்களில் அபாய அளவைத் தாண்டி பாய்கிறது" என அசாம் மாநில பேரிடர் நிர்வாக ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ஸ்டெர்லைட் ஆலையை ரூ.4,500 கோடிக்கு விற்க வேதாந்தா நிறுவனம் திட்டம்

தூத்துக்குடி, ஜூன். 23–

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் நிறுவனத்துக்கு எதிராக கடந்த 2018-ம் ஆண்டு போராட்டம் நடைபெற்றது. அப்போது நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தை தொடர்ந்து ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டது. ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடி தமிழ்நாடு அரசு பிறப்பித்த அரசாணையை உயர்நீதிமன்றமும் உறுதி செய்தது.

இந்த உத்தரவை எதிர்த்து ஸ்டெர்லைட் ஆலையின் தாய் நிறுவனமான வேதாந்தா சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் வரும் ஆகஸ்ட் மாதம் தீர்ப்பளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், 5 ஆண்டுகளாக மூடப்பட்டுள்ள ஸ்டெர்லைட் ஆலையை 4,500 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்ய வேதாந்தா நிறுவனம் முடிவு செய்துள்ளது.

ஏற்கனவே கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஸ்டெர்லைட் ஆலையை விற்பனை செய்வதாக வேதாந்தா நிறுவனம் அறிவித்திருந்தது. ஆனால், ஆலையை யாரும் வாங்க முன்வராத நிலையில், தற்போது மீண்டும் ஆலையை விற்பனை செய்வதற்கான பணிகளை தொடங்கியுள்ளது.

கடனில் தத்தளித்து வரும் வேதாந்தா நிறுவனம், தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் ஆலையை விற்பதன் மூலம் திரட்டப்படும் தொகை, இந்த ஆண்டுக்கான அதன் மூலதனச் செலவுகளை ஈடுகட்ட உதவும் என்று வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

# அமுல்' சிறுமியை உருவாக்கிய ‘விளம்பரத் துறை குரு' சில்வெஸ்டர் டா குன்ஹா காலமானார்

மும்பை, ஜூன். 23–

அமுல் சிறுமியை வடிவமைத்த சில்வெஸ்டர் டா குன்ஹா காலமானார். 80 வயதைக் கடந்த அவர், உடல்நலக் குறைவால் மும்பையில் உள்ள அவரது இல்லத்தில் உயிரிழந்தார் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

சில்வெஸ்டர் டா குன்ஹா மரணம் குறித்து அமுல் நிறுவனத்தின் குஜராத் சந்தைப்படுத்தல் மேலாளரான பவன் சிங் கூறும்போது, “குன்ஹா இந்திய விளம்பர உலகின் லெஜண்ட். உலகின் மிக நீண்ட தொடர்ச்சியான விளம்பர பிரச்சாரங்களில் ஒன்றை வடிவமைத்திருக்கிறார்” என்று தெரிவித்துள்ளார். மேலும் நிறுவன முன்னாள், இன்னாள் அதிகாரிகளும்,



சசி தரூர் உள்ளிட்ட அரசியல் தலைவர்களும் சில்வெஸ்டர் டா குன்ஹா இறப்புக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்திய அளவில் பிரபலமாக உள்ள அமுல் பால் உற்பத்தி நிறுவனம், குஜராத்தை மையாக கொண்டு செயல்படுகிறது. இந்நிறுவனத்தின் பால் சார்ந்த பொருட்களை மக்களிடம் பிரபலப்படுத்த அந்நிறுவனம் 60-களில் அப்போது விளம்பரத் துறையில் பிரபலமாக இருந்த ஏஎஸ்பி விளம்பர ஏஜென்சியை அணுகுகிறது. சில்வெஸ்டர் டா குன்ஹாதான் அந்த நிறுவனத்தின் தலைவராக இருந்தார்.

அந்த வகையில் விளம்பரத் துறையில் குருவாக இருந்த சில்வெஸ்டர் குன்ஹா 1966-ஆம் ஆண்டு அமுலை விளம்பரப்படுத்தும் முயற்சியில்தான் அமுல் சிறுமி என்ற பிரச்சாரத்தை முன்னெடுத்தார். முதன்முதலில் அமுல் நிறுவனத்தின் வெண்ணெய் தயாரிப்பு பொருட்களில்தான் அமுல் சிறுமி இடம்பெற்றார்.

நாளடைவில் அமுலின் அடையாளமாகவே அந்த சிறுமி அறியப்பட்டார். மேலும், இந்திய - உலகளவில் நிகழும் முக்கிய நிகழ்வு நடந்தால் அதனை அச்சிறுமி வாயிலாக மக்களுக்கு அறிவிக்கும் உத்தியை சில்வெஸ்டர் குன்ஹா கையாண்டார். இந்த முயற்சிக்கும் பெறும் வரவேற்பு கிடைத்தது.

# இல்லம் தேடி கல்வி மைய தன்னார்வலர்களுக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அறிவுரை

கந்தர்வகோட்டை, ஜூன். 23–

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றிய மெய்குடிப்பட்டி இல்லம் தேடி கல்வி மையத்தை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கலையரசன் பார்வையிட்டு ரஞ்சினி, லாவண்யா, ரம்யா, தேவி ஆகியோருக்கு ஆலோசனை வழங்கினார்:-



பள்ளி மேலாண்மை குழு கூட்டத்தில் இல்லம் தேடிக் கல்வி மைய தன்னார்வலர்கள் கலந்து கொண்டு தங்களுடைய வருகை பதிவை பள்ளி மேலாண்மை குழு செயலியில் பதிவு செய்ய வேண்டும்.

இல்லம் தேடிக் கல்வி மையத்தில் நடைபெறும் கற்றல், கற்பித்தல் பணிகளையும் , தொடக்கநிலை உயர் தொடக்க நிலை தன்னார்வலர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகளையும் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுடனும் கலந்துரையாட வேண்டும். பெற்றோர்களிடம் இல்லம் தேடி கல்வி மையத்திற்கு தங்களுடைய குழந்தைகளை தொடர்ந்து அனுப்புமாறு தெரிவிக்க வேண்டும்.

மாணவர்கள் வருகையை தினந்தோறும் இல்லம் தேடி கல்வி செயலில் பதிவேற்றம் செய்ய வேண்டும் எனவும், மாணவர்களுக்கு வாசிப்பு பயிற்சி தொடர்ந்து அளிக்க வேண்டும் எனவும், எண்ணும், எழுத்தும் திட்டம் தொடக்க மாணவர்கள் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்புவரை நடைமுறையில் உள்ளது. பள்ளி செல்லா குழந்தைகளை கண்டறிந்து அவர்களை பள்ளியில் சேர்க்க வேண்டும், தங்களுடைய படைப்புகளை இல்லம் தேடிக் கல்வி மைய தன்னார்வலர்களுக்கான வெளிவரும் தொடுவானம் இதழில் அனுப்ப வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்.

மாணவர்கள் வாசித்தல், கதை, விளையாட்டு, பாடல்கள் மற்றும் எளிய அறிவியல் செயல்பாடுகள் மூலம் கற்று தருவது பெற்றோர்கள் மத்தியில் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது. இப்பார்வையின் போது ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா உடனிருந்தார்.

# ஒருபக்கம் குப்பை மேடு... மறுபக்கம் கிரிக்கெட்... கிருஷ்ணாம்பேட்டை சுடுகாடு பராமரிப்பில் அலட்சியம் !

சென்னை, ஜூன். 23–

உயிரிழந்த மக்களை சிரமத்துக்கு ஆளாக்காத வகையில் தூய்மையாகவும், நேர்த்தியாகவும், இறந்தவர்களின் உடல்களை புதைக்கும் இடங்கள் மற்றும் சுடுகாடுகளை அமைக்க அரசு முனைப்புக் காட்டி வருகிறது என்பதை மாவட்ட ஆட்சியர்கள் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகிறேன் என்று தலைமைச் செயலாளர் இறையன்பு அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளார். ஆனால், அந்தக் கடிதத்திற்கு முற்றிலும் மாறாக சென்னையில் ஒரு சுடுகாடு உள்ளதை நம்மால் காண முடிந்தது.

அந்தச் சுடுகாட்டின் பெயர் கிருஷ்ணாம்பேட்டை நவீன எரிவாயு தகன மேடை. இந்தச் சுடுகாட்டில் நாம் கண்ட காட்சி எல்லாம் உயிரிழந்தவர்களின் உறவினர்களை மிகவும் சிரமத்துக்கு உள்ளாக்கும் வகையில்தான் இருந்தன. சென்னையில் நகரின் முக்கியப் பகுதியில் இந்த கிருஷ்ணாம்பேட்டை சுடுகாடு உள்ளது. இந்தச் சுடுகாட்டில் வாரத்தில் 5 முதல் 10 உடல்களை தகனம் செய்யப்படுவதாக கூறப்படுகிறது. ஆனால், முற்றிலும் சுகாதாரம் இல்லாமல் மிகவும் மோசமான நிலையில் இந்த சுடுகாடு இயங்கி வருகிறது.

சுடுகாட்டின் உள்ளே செயல்பட்டு வரும் குப்பை சேகரிப்பு மையம் முறையாக செயல்படவில்லை. இதன் காரணமாக குப்பைகள் மலை போல் குவித்து வைக்கப்பட்டுள்ளது. அந்தக் குப்பைகளுக்கு நடுவில் மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. தங்களுக்கு குடும்பத்தில் ஒருவரை இழந்து விட்டு, அவர்களுக்கு இறுதிச் சடங்கு செய்ய வரும் பொதுமக்களின் கண்ணில் இந்தக் குப்பைமேடுகள்தான் தென்படுகிறது.

மறுபுறம் சிறுவர்கள் சுடுகாட்டின் உள்ளே கிரிக்கெட் விளையாடி கொண்டிருந்தனர். ஒரு மரணம் நிகழ்ந்த வீட்டைச் சேர்ந்தவர்கள் பல்வேறு மனநிலையுடன் இருப்பார்கள். அவ்வாறு பல்வேறு மன நிலை கொண்டவர்கள் வந்து செல்லும் இடத்தில் ஒரு சில சிறுவர்கள் கத்திக் கொண்டு கிரிக்கெட் விளையாடி கொண்டு இருப்பது எந்த வகையில் சரி என்பதை இந்த சுடுகாட்டை





பராமரித்து வரும் சென்னை மாநகராட்சிதான் விளக்கம் வேண்டும்.

முன்னதாக, கடந்த பிப்ரவரி மாதம், சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மயான பூமிகளில் மேற்கொள்ள வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தை மேயர் பிரியா நடத்தினார். இக்கூட்டத்தில், மேயர் பேசுகையில், "சென்னையில் மாநகராட்சிக்கு சொந்தமான மயானபூமிகளில் உடல்களை எரித்தல் மற்றும் புதைத்தல் சேவைகள் இலவசமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த இலவச சேவையினை அலுவலர்கள் உறுதிப்படுத்திட வேண்டும். மயான பூமிகளில் நாள்தோறும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ள வேண்டும். மயான பூமிகளில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பணிகளை மேற்கொள்ளவும் தன்னார்வ அமைப்புகள் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் வாய்ப்புகள் உருவாக்கித் தரப்படும். இந்த மயான பூமிகளில் சேவைகள் இலவசமாக வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் அதற்குண்டான அறிவிப்புப் பலகைகளை மயானபூமிகளின் வாயிலில் பொதுமக்கள் பார்வைக்கு தெரியும்படி வைக்க வேண்டும். இது குறித்து தகவல்கள் மாநகராட்சியின் www.chennaicorporation.gov.in இணையதளத்தில் வெளியிடப்படும்.

மயானபூமியில் நுழைவுப் பகுதியை அழகுபடுத்தி, உட்புறங்களில் சாலை வசதி உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும். வரும் பொதுமக்கள் அமரும் வகையில் இருக்கைகள் அமைக்கப்பட வேண்டும். கழிப்பறைகளை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். சுவரொட்டிகள் ஒட்டுவதைத் தவிர்க்கும் வகையில் அலுவலர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என்று பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இவற்றில் ஏதாவது ஒன்று, இந்த கிருஷ்ணாம்பேட்டை சுடுகாட்டில் பின்பற்றப்பட்டுள்ளதா என்பதை சென்னை மாநகராட்சி மேயர் பிரியாவும், உயர் அதிகாரிகளும் ஆய்வு செய்து இருக்க வேண்டும். ஆனால், உத்தரவு போடுவது மட்டுமே நமது கடமை, செயல்படுத்துவது ஊழியர்களின் என்ற எண்ணத்தில் மேயரும், உயர் அதிகாரிகளும் இருந்துள்ளனர் என்பதற்கு எடுத்துக்காட்டு தான் இந்த கிருஷ்ணாம்பேட்டை சுடுகாடு.

இனி வரும் காலங்களில் மேயர், மாநகராட்சி ஆணையர், துணை ஆணையர், வட்டார துணை ஆணையர்கள், துறை தலைவர்கள் இதுபோன்ற இடங்களில் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். இது தொடர்பாக மாநகர நல அலுவலர் ஜெகதீசனிடம் கேட்டபோது, “இந்த சுடுகாட்டை தூய்மையான முறையில் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

முன்னதாக, தலைமை செயலாளர் எழுதி இருந்த கடிதத்தில், "உயிரிழந்த மக்களை சிரமத்திற்கு ஆளாக்காத வகையில், தூய்மையாகவும், நேர்த்தியாகவும், இறந்தவர்களின் உடல்களை புதைக்கும் இடங்கள் மற்றும் சுடுகாடுகளை அமைக்க அரசு முனைப்பு காட்டி வருகிறது உள்ளது என்பதை மாவட்ட ஆட்சியர்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன் ஏற்கனவே சுடுகாடுகள் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வந்தால் அதில் எந்த பிரச்சனையும் இல்லை. பல இடங்களில் உள்ள மயானம் மற்றும் சுடுகாடுகள் முறையாக பராமரிக்கப்படாமல் உள்ளது.

குறிப்பாக அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் நடைபெறும் நகர்ப்புறங்களில் அடிப்படை வசதிகள் கூட இல்லை. எனவே சுற்றுச்சுவர் அமைத்து, பூச்செடிகள் மற்றும் மரங்களை நடுவதன் மூலம், பசுமை சுடுகாடுகை உருவாக்கலாம். மக்கள் அமருவதற்கு இருக்கை வசதி, தண்ணீர் வசதி உள்ளிட்ட வசதிகளை வழங்க உங்கள் பகுதியில் உள்ள சேவை நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையின் சேவையையும் பயன்படுத்தலாம். இது நிச்சயமாக சுடுகாடுகளின் ஒட்டுமொத்த சூழலை மேம்படுத்தும். இறந்த ஆத்மாக்களுடன் வரும் பொது மக்களுக்கு இது நிவாரணம் அளிக்கும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இது போன்ற ஒரு சிறந்த சுகாட்டை நீங்கள் உருவாக்கலாம் மற்றும் அதைப் பிரதிபலிக்கும் வகையில் மற்றவர்களை ஊக்குவிக்கலாம். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் இரண்டின் பிம்பத்தையும் மேம்படுத்த இது பெரிதும் உதவும். இதற்கு தேவையான நடவடிக்கைகளை தயவு செய்து செய்யுங்கள்” என்று அதில் கூறியுள்ளார்.

# மயிலாடுதுறை மாவட்ட சுற்றுலா தளங்களை அமைச்சர் ராமச்சந்திரன் ஆய்வு



மயிலாடுதுறை, ஜூன்-23

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியில் உள்ள டேனிஷ் கோட்டை சீரமைப்பு, பூம்புகார் சுற்றுலா தலத்தை மேம்படுத்தும் பணிகள் குறித்து தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து திருக்கடையூரில் உள்ள சுற்றுலாத்துறைக்கு சொந்தமான தமிழ்நாடு ஹோட்டலை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் சுற்றுலா வளர்ச்சிப்பணிகள் குறித்து ஆய்வுசெய்யப்பட்டுள்ளது. தரங்கம்பாடியில்ரூ.3கோடி செலவில் மேம்பாட்டுப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது. பூம்புகாரில்ரூ.23கோடியே 60 லட்சம் மதிப்பில் மேம்பாட்டுப் பணிகள் செய்யப்பட்டுவருகின்றன. 6 மாதங்களில் பணிகள் முடிக்கப்படும் என அதிகாரிகள் கூறியுள்ளனர். திருக்கடையூரில் உள்ள தமிழ்நாடு ஹோட்டல் கட்டப்பட்டு 5 ஆண்டுகள் ஆகின்றன. இதை முறையாக பராமரித்தால் சுற்றுலாப்பயணிகள் அதிக அளவில் வருவார்கள்.

மயிலாடுதுறை மாவட்டத்துக்கு கடந்த ஆண்டுசுற்றுலாப்பயணிகள் 6 லட்சத்து 60 ஆயிரம் பேர் வந்துள்ளனர். நிகழாண்டு 4 மாதங்களில் 9 லட்சத்து 71 ஆயிரம் பேர் வந்துள்ளனர். தரங்கம்பாடியில் உள்ள கவர்னர் மாளிகையை அடுத்தஆண்டில்சீரமைக்க நடவடிக்கைஎடுக்கப்படும். தரங்கம்பாடியில் அடுத்தக்கட்டமாக மேலும் பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

ஆய்வின்போது சுற்றுலாத்துறை இயக்குநர் சந்தீப் நந்துரி, மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி, சீர்காழி வருவாய்கோட்டாட்சியர் அர்ச்சனா, திமுகதலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாற்ற மாவட்ட சுற்றுலா துறை அலுவலர் அரவிந்தகுமார், தரங்கம்பாடி வட்டாட்சியர் சரவணன், தரங்கம்பாடி பேரூர் மன்ற தலைவர் சுகுணசங்கரி குமரவேல், ஒன்றிய செயலாளர்கள் அமிர்த. விஜயகுமார், எம்.அப்துல் மாலிக், முருகமணி, தரங்கை பேரூர் திமுக செயலாளர் முத்துராஜா, மற்றும் சுற்றுலாத்துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.



▶ சென்னை தண்டையார் பேட்டை புதிய வினோபா நகர் 11வது தெரு குழந்தைகள் காப்பகம் அங்கன்வாடி மையத்தில் மழைக்காலம் தொடர்ச்சியாக மருத்துவ முகாம் 4வது மண்டல குழு தலைவர் நேதாஜி யு. கணேசன் எம். சி. தொடங்கி வைத்தார் உடன் 38 வட்டக் கழக செயலாளர் எஸ். எல் .சுந்தர் கழக செயல்வீரர் கமருதீன் 38வது வட்ட சுகாதார அதிகாரி ரவிச்சந்திரன் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.

# திருக்கடையூர் கோயிலில் செய்தித்துறை அமைச்சர் வழிபாடு





திருக்கடையூர், ஜூன்-23

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா திருக்கடையூரில் தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான அபிராமி சமேத அமிர்தகடேஸ்வரர் கோவில் அமைந்துள்ளது. சிவபெருமான் கால சம்ஹார மூர்த்தியாக எழுந்தருளி மார்க்கண்டேயருக்காக எமனை சம்காரம் செய்ததால் அட்ட விரட்ட தலங்களில் ஒன்றாக திகழ்ந்து வருகிறது. இதனால் நாள்தோறும் ஏராளமான பக்தர்கள் தேவார பாடல் பெற்ற இக்கோவிலுக்கு வந்து ஆயுள் விருத்தி வேண்டி சிறப்பு ஹோமங்கள் நடத்தி சுவாமி அம்பாளை வழிபடுவது வழக்கம்.

இதகைய சிறப்புமிக்க கோவிலுக்கு நேற்று காலை தமிழ்நாடு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சுவாமிநாதன் தனது குடும்பத்துடன் வந்தார். அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து கோவிலுக்குள் சென்ற அமைச்சர் சுவாமிநாதன் கோ பூஜை, கஜ பூஜை, செய்தார். பின்னர் அவர் அமிர்தகடேஸ்வரர் கால சம்ஹார மூர்த்தி, அபிராமி அம்பாள் சன்னதிகளுக்கு சென்று சிறப்பு வழிபாடு நடத்தினார். பூஜைகளை கணேஷ் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் செய்து வைத்தனர்.

முன்னதாக அமைச்சர் சுவாமிநாதனை மயிலாடுதுறை மாவட்ட மக்கள்தொடர்பு அலுவலர் ரவிச்சந்திரன் மற்றும் செம்பனார்கோவில் மத்திய திமுக ஒன்றிய செயலாளர் அமுர்த. விஜயகுமார், தரங்கை பேரூர் தி.மு.க.செயளாலர் முத்துராஜா, செம்பை ஒன்றிய துணைத் தலைவர் மைனர் பாஸ்கர், இளைஞர் அணி ஒன்றிய அமைப்பாளர் இரா.செந்தில், ஊராட்சி மன்ற தலைவர் ஜெயமாலதி சிவராஜ் ஆகியோர் வரவேற்றனர். அமைச்சர் வருகையொட்டி பொறையார் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# சென்னை மெட்ரோ ரயிலில் வாட்ஸ் அப் டிக்கெட் அறிமுகம்



சென்னை, ஜுன்,23

சென்னை மெட்ரோ ரயிலில் வாட்ஸ் அப் டிக்கெட்டை அறிமுகப்படுத்திய ஒரே மாதத்தில் 70,618 பேர் பயணம் செய்துள்ளதாக மெட்ரோ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அடுத்த ஒரு மாதத்துக்குள் இருமடங்காக கடந்த ஜூன் 20 வரை மொத்தம் 79,912 பேர் வாட்ஸ் அப் டிக்கெட் மூலம் மெட்ரோ ரயிலில் பயணம் செய்துள்ளனர்.

# மழலையர் பள்ளியில் குழந்தைகளை துன்புறுத்திய பாஜக பெண் நிர்வாகி கைது



சென்னை, ஜுன்,23

சென்னை வில்லிவாக்கத்தில்மழலையர் பள்ளியில் குழந்தைகளின் கை, கால்களை கட்டி துன்புறுத்தியதாக,பள்ளியின் உரிமையாளரும், பாஜக மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளருமான மீனாட்சி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சிறுவனை துன்புறுத்தியதுடன், அதனைகேட்கசென்றதாய் சரண்யாவை மிரட்டியது சிசிடிவிகாட்சிகளின் மூலம் தெரியவந்ததையடுத்து மீனாட்சிமீது 5 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்த காவல்துறையினர் அவரை கைது செய்தனர்.

# மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதியதாக கட்டி முடிக்கப்பட்ட பள்ளி கட்டிடம் திறப்பு விழா



செங்கல்பட்டு, ஜுன்,23

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த கருங்குழி பேரூராட்சிக்கு உட்பட்ட மலை பாளையம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளி செயல்பட்டு வந்தது இந்த நிலையில் பள்ளி மாணவ மாணவிகளின் நலன் கருதி கடந்த 2021 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளியாக இருந்த இப்பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது.

ஆனால் இந்த தரம் உயர்த்தப்பட்ட பள்ளியில் போதிய வகுப்பறைகள் இல்லாமல் மாணவ மாணவிகள் மரத்தடியில் அமர்ந்து படிக்கும் நிலை இருந்து வந்துள்ளது இந்த நிலையில் மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகத குமரவேல்,இந்த பள்ளிக்கு புதியதாகபள்ளி கட்டிடம் கட்டித் தர வேண்டும் என பெற்றோர்கள் ஆசிரியர்கள் கோரிக்கை வைத்தனர்.

இந்த நிலையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து 17.40 லட்சரூபாய் மதிப்பீட்டில் புதியதாக இரண்டு வகுப்பறைகட்டிடம்கட்டி முடிக்கப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது இதில் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ். ஆறுமுகம் மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் கலந்து கொண்டு புதியதாக கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத்தை பள்ளி மாணவ மாணவிகள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் அப்பாதுரை கார்த்திகேயன் ஒன்றிய குழு பெருந்தலைவர் கீதா கார்த்திகேயன் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் ஆனூர் பத்வாசலம் பேரூர் செயலாளர் பழனி உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

5,362 மதுக்கடைகளையும் மூடவேண்டும்

# புதிய தமிழகம் கட்சி தலைவர் கிருஷ்ணசாமி வலியுறுத்தல்



**மதுரை , ஜுன்,23**

**தமிழகத்திலுள்ள 5,362 மதுபானக் கடைகளும் மூடவேண்டும் என்று புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி வலியுறுத்தினார்.**

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து சென்னை செல்ல மதுரை விமான நிலையம் வந்த புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி நேற்று செய்தியாளர்களிடம் கூறியது: ''தமிழகத்தில் 1937 முதல்1971வரை பூரண மதுவிலக்கு அமலில் இருந்தது . 71-ல் திமுக ஆட்சியில் மதுவிலக்கு தளர்த்தப்பட்டது. தொடர்ந்து 20 ஆண்டாகவே மதுவிலக்கு அமல், தளர்வு என, மாறி மாறிகொண்டுவரப்பட்டு, தற்போது டாஸ்மாக் என்ற நிறுவனமே மதுக் கொள்முதல், சில்லறை விற்பனையை நடத்துகின்றது.

தமிழகத்தில் ஒரு காலத்தில் ஆயிரத்தில் ஒருவர் என்ற நிலை மாறி, தற்போது, சுமா 60% பேர் பள்ளி, கல்லூரி மாணவர்கள் உட்பட மதுப் பழக்கத்திற்கு ஆளாகி உடல்நிலை பாதிக்கின்றனர். ஆட்டோ ஓட்டுநர்கள், விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். ரூ.20-க்கு தயாராகும் மது 150, 160 முதல் 300 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

டாஸ்மாக்கில் மதுபானம் கொள்முதலிலே ஊழல் நடக்கிறது. ஒரு கோடிக்கு மது பாட்டில்கள் வாங்கும்போது 60% என, ரூ.60 லட்சம் பாட்டில்களுக்கு மட்டுமே ஆயத்தீர்வை வரி செலுத்தப்படுகிறது. இதில் ஊழல் நடக்கிறது. இந்தியாவிலேயே தரம் குறைவான மதுபானங்கள் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது.

எங்களது கட்சி சார்பில், ஆகஸ்டு 15-ல் தமிழகம் முழுவதும்பூரண மதுவிலக்கு கொண்டு வர வலியுறுத்துவோம். தமிழகத்திலுள்ள 5,362 மதுபானக் கடைகளும் மூடவேண்டும். 500 கடைகள் மூடப்படுவதாக அறிவிப்பது மதுவிலக்கின் அம்சம் அல்ல.

2011 முதல் 2016 வரை போக்குவரத்து துறை அமைச்சராக இருந்தபோது, அமைச்சர் செந்தில்பாலாஜி ரூ.5 லட்சம் முதல் 10 லட்சம் வரை பணிநியமனலஞ்சம் பெற்றதாக கொடுத்த வழக்கில் அமலாக்கத் துறையா கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மீதான தற்போதைய வழக்கில் தப்பித்தாலும், டாஸ்மாக் பார் ஊழல் வழக்கில் முடியாது.

நடிகர் விஜய் அரசியலுக்கு வரலாம், வராமல் போகலாம். அது கவலை இல்லை. ஆனால், வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதாக கூறிய கருத்தை வரவேற்கிறேன்'' என்று அவர் கூறினார்.

# ஆரணியில் மூன்று இரு சக்கர வாகனங்களை திருடிய வாலிபர் சிறையில் அடைப்பு



ஊத்துக்கோட்டை, ஜூன்23-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி பகுதியில் மோட்டார் சைக்கிள் திருடு போகும் சம்பவம் தொடர்கதையாக இருந்து வந்தது. இந்நிலையில், திருவள்ளூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சீபாஸ் கல்யாண் உத்தரவின் பேரில் ஊத்துக்கோட்டைதுணை போலீஸ் சூப்பிரண்டு கணேஷ் குமார் தலைமையில் ஸ்பெஷல் டீம் அமைக்கப்பட்டது.

எனவே, அந்த ஸ்பெஷல் டீம்போலீசார் மோட்டார் சைக்கிள் திருட்டில் ஈடுபடுபவரை வலை வீசி தேடி வந்தனர். இந்நிலையில், நேற்று இரவு ஆரணி, பஜார் தெரு, அத்திகுளம் பகுதியைச் சேர்ந்த சூர்யா(வயது23) என்பவர் சந்தேகத்துக்கு இடமான வகையில் ஆரணியில் சென்று கொண்டிருந்தார். எனவே,அவரைபோலீசார் பிடித்து சோதனை மேற்கொண்டனர். அப்பொழுது அவர் மறைத்து வைத்திருந்த 250 கிராம் கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்தனர்.

மேலும், அவரை காவல்நிலையம்கொண்டு சென்று விசாரணை மேற்கொண்டனர். அப்பொழுது அவர் மூன்று இருசக்கர வாகனங்களைதிருடியதை ஒப்புக்கொண்டார். இது குறித்து அவர் அளித்த தகவலின்படி போலீசார் இருசக்கர வாகனங்களை பறிமுதல் செய்து காவல் நிலையம் கொண்டு வந்தனர். மேலும்,குற்றவாளி மீது வழக்கு பதிவு செய்து பொன்னேரி முதல் நிலை குற்றவியல் நீதிமன்ற மாஜிஸ்ரேட்டு முன்னிலையில் ஆஜர் செய்துபொன்னேரிகிளை சிறையில் அடைத்தனர். குற்றவாளி சூர்யா மீது பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளதும் சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழக பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜை, தமிழ்நாடு பால் முகவர்கள் தொழிலாளர்கள் நலச் சங்கம் சார்பில்

# சங்கத்தின் நிறுவனத் தலைவர் அடங்கிய உயர்மட்டக் குழுவினர் அடையாறு, அரசு இல்லத்தில் சந்தித்தனர்



சென்னை , ஜூன்23-

தமிழக பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜை, தமிழ்நாடு பால் முகவர்கள் தொழிலாளர்கள் நலச் சங்கம் சார்பில் சங்கத்தின் நிறுவனத் தலைவர் சு.ஆ.பொன்னுசாமி தலைமையில் மாநில பொதுச்செயலாளர் எஸ். பொன்மாரியப்பன், மாநில பொருளாளர் எஸ்.முருகன், மாநில செய்தி தொடர்பாளர் எஸ்.வெங்கடேசபெருமாள் ஆகியோர் அடங்கிய உயர்மட்டக் குழுவினர் நேற்று காலை சென்னை, அடையாறு, பசுமை வழிச் சாலையில் உள்ள அரசு இல்லத்தில் நேரில் சந்தித்தனர்.

சந்திப்பின் போது பால் உற்பத்தியாளர் களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பாலுக்கு உடனுக்குடன் ஒப்புகை சீட்டு வழங்க வேண்டும் என மதுரை உயர்நீதிமன்றம் கடந்த 2017ல் உத்தரவிட்டும் பல ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் இருந்த நிலையில் மனோ தங்கராஜ் பால்வளத்துறை அமைச்சராக பொறுப்பேற்ற ஒரு மாதத்திலேயே அதற்கு செயல்வடிவம் கொடுத்து அமுல்படுத்தியதற்கும், தினசரி பால் கொள்முதல் சுமார் 27லட்சம் லிட்டரில் இருந்து 30லட்சம் லிட்டராக உயர்த்தி சுமார் 3லட்சம் லிட்டர் பால் கொள்முதல் அதிகரிக்க நடவடிக்கை எடுத்தமைக்கும், ஆவின் பால் பண்ணைகளில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ஊதியமாக 200ரூபாய் முதல் 300ரூபாய் வரை மட்டுமே வழங்கப்படுவதையும், அவர்களுக்கு ஈ எஸ் ஐ, பி.எப் உள்ளிட்ட வசதிகள் வழங்கப்படாததையும் தனது கள ஆய்வின் போது கண்டறிந்து ஒப்பந்த தொழிலாளர்களுக்கு உரிய சம்பளம் மற்றும் ஈ எஸ் ஐ, பி.எப்.உள்ளிட்ட வசதிகளை வழங்கிடவும் நடவடிக்கை எடுத்தமைக்கு தமிழ்நாடு பால் முகவர்கள் தொழிலாளர்கள் நலச் சங்கம் சார்பில் அமைச்சருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

காரைக்காலில் சர்வதேச போதை பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு

# விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் கொடியசைத்து துவக்கி வைத்தார்





காரைக்கால், ஜூன்23-

காரைக்கால் மாவட்ட தேசிய மாணவர் படை (என் சி சி) மற்றும் காரைக்கால் புதுவாழ்வு மது போதை மாற்று சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையம் இவை இணைந்து நேற்று காரைக்கால் மாவட்டத்தில் அமைந்துள்ள பேருந்து நிலையம் எதிரே சர்வதேச போதை பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியை காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இப்பேரணி பாரதிவீதி வழியாக காரைக்கால் மாவட்ட ஆட்சியரகம் வரை விழிப்புணர்வு பதாகைகள் மற்றும் பொதுமக்களுக்கு நோட்டீஸ்கள் அளித்தும் போதைப் பொருளின் தீமைகள் குறித்து பொதுமக்களுக்கும் பள்ளி மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்திய வண்ணம் பேரணி நடைபெற்றது.

இந்நிகழ்வில் நலவைழித்துறை துணை இயக்குனர் டாக்டர். சிவராஜ்குமார் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த கர்னல் ஜோஷி மதுபோதை மருவாழ்வு மைய செயலாளர் மகேஸ்வரி மற்றும் தேசிய மாணவர் படை மாணவர்கள் சுமார் 100-க்கும் மேற்பட்டோர் இந்த விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் நலவழித்துறைதுறை துணை இயக்குனர் டாக்டர் சிவராஜ்குமார் பேசுகையில் மது மற்றும் போதை பொருட்களால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் அதிலிருந்து எப்படி மீல்வது என்பது குறித்தும் உரையாற்றினார். மாவட்ட நிர்வாகம் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இணைந்து பல்வேறு விழிப்புணர்வு . மேலும் மாணவர்களை உற்சாகப்படுத்தி அவ்விடத்தில் உறுதிமொழியும் எடுத்துக் கொள்ளப்பட்டது.



▶ **புதுவை மாநில, காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பாக காரைக்காலில் பல்வேறு துறைகளில் பணியாற்றும் அரசு ஊழியர்களான இளநிலை எழுத்தர், லேநிலை எழுத்தர், மற்றும் உதவி பணியாளர்கள் ஆகியோருக்கு அலுவலக கோப்புகளை தயாரித்தல், கடிதங்களை திறம்பட கையாளுதல், மேம்பட்ட முறையில் பணியாற்றுதல் ஆகியவற்றிற்கு ஒரு நாள் பயிற்சி வகுப்பு நேற்று காலை 9.30 மணியளவில் மதகடியில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் நிர்வாக வளாகத்தில் நடைபெற்றது. இப்பபயிற்சி வகுப்பை காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் துவக்கி வைத்தார். இந்த பயிற்சி வகுப்பினை புதுவையில் இருந்து வந்துள்ள சந்திரகுமார் இயக்குனர் ராணுவ நலத்துறையின் (சைனிக் வெல்பர்) சுமார் 100-க்கும் மேற்பட்ட அரசுத்துறையைச் சேர்ந்த எல்.டி.சி. யூ டி சி. உதவியாளர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளித்தார்கள். இதில் கலந்து கொண்டு அனைவரும் பயன்பெற்றார்கள்.**



▶ **காரைக்கால் மாவட்டம் தெற்கு தொகுதியில் அமைந்துள்ள ஞானப்பிரகாசம் வீதியில் நேற்று முன் தினம் இரவு திடீரென ஒரு குடிசை வீட்டில் தீ விபத்து ஏற்பட்டது. தீபற்றிய அந்த வீடு முற்றிலும் சேதம் அடைந்த நிலையில் இதை அறிந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜிம் சம்பவ இடத்திற்கு உடனடியாக சென்று பார்வையிட்டு வருவாய்த்துறை மூலம் அந்த குடும்பத்திற்கு 20,000 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை பாதிக்கப்பட்டவருக்கு வழங்கினார்கள். இந்நிகழ்வில் வட்டாட்சியர் மதன்குமார் மற்றும் துறை அதிகாரிகள் முக்கிய பிரமுகர்கள் உடன் இருந்தனர். மேலும் முதலுதவி பொருட்களும் அளிக்கப்பட்டன.**

# நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 10,000 பொறியாளர்களை நியமிக்க நடவடிக்கை அமைச்சர் கே.என்.நேரு தகவல்



சென்னை , ஜூன். 23- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 10,000 பொறியாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 மற்றும் விதிகள், 2023 தொடர்பான பயிலரங்கத்தை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு நேற்று தொடங்கி வைத்தார். அந்த நிகழ்ச்சியில் அமைச்சர் பேசுகையில், "தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998-க்கான (திருத்தம்), 2022 சட்டம் 11 பகுதிகளாகவும் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான விதிகள் 2023, 13 பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டு உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளுக்கான அனைத்து வரன்முறைகளும் உள்ளடக்கியதாக வகுக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளும் சட்டவிதிகளுக்குஉட்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் தமிழ்நாடு அரசிற்கு பெருமை சேர்க்கும் வகையிலும், பொதுமக்களின் பாராட்டுதல்களை பெறும் வகையில் இருக்க வேண்டும். அரசின் அனைத்து திட்டங்களும் சரியான வகையில் பொதுமக்களை சென்றடைய வேண்டும். நகராட்சி நிருவாகத் துறையில் பணியாற்றும் அலுவலர்கள் இதற்காக எந்தவித சமரசமும் இல்லாமல் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அலுவலர்களுக்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்பினையும் நகராட்சி நிர்வாகத்துறை நிச்சயமாக வழங்கும்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் அனைத்தும் உரிய நடைமுறைகளைப் பின்பற்றியே இருக்க வேண்டும். இதற்காக உரிய சட்ட விதிகள் கொண்டு வரப்பட்டுள்ளது. இதை அனைவரும் சரியான புரிதலோடு செயல்படுத்த வேண்டும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் அனைத்து நிலை அலுவலர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளோடு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். அப்பொழுது தான் அரசினுடைய நோக்கமும், திட்டங்களும் பொதுமக்களை சரியாக சென்றடையும். இதை அனைவரும் கடைபிடிக்க வேண்டும்.

இச்சட்ட விதிமுறைகள் கடந்த 10 மாதங்களாக தயாரிக்கப்பட்டு சட்டத் துறையின் அனுமதிபெற்று வெளியிடப்பட்டுள்ளது. இதில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்ப்பதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கைகளை 3 மாத காலத்திற்குள் அரசிற்கு சமர்ப்பித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, 10 ஆயிரம் பொறியாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு எடுத்து வருகிறது" என்று அவர் பேசினார்.



புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்து பழைய பென்ஷன் திட்டத்தை அமல்படுத்திட வேண்டும், பஞ்சப்பாடி உள்ளிட்ட 23 சலுகைகளை பறிக்கும் வாரிய ஆணையை ரத்து செய்ய வேண்டும், கேங்மேன் பணியாளர்களுக்கு கள உதவியாளர் பணி உயர்வு வழங்கிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி புதுக்கோட்டை மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு சிஐடியு சார்பில் மாநிலம் தழுவிய கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் திட்ட தலைவர் சித்தையன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் ஸ்ரீதர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பினர்.

## ஒரு குடும்பமாக இருந்து பாஜகவை எதிர்ப்போம் மம்தா பானர்ஜி வலியுறுத்தல்



பாட்னா, ஜூன். 23- ஒரு குடும்பமாக இருந்து வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பாஜகவை எதிர்ப்போம் என்று மேற்கு வங்க முதல்வரும், திரிணமூல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பாஜகவை எதிர்கொள்வதற்கான வியூகம் தொடர்பாக ஆலோசிக்க எதிர்க்கட்சிகள் பிஹார் தலைநகர் பாட்னாவில் இன்று கூடுகின்றன. இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக பாட்னாவுக்கு வருகை தந்த மம்தா பானர்ஜி, பிஹார் முன்னாள் முதல்வரும் ராஷ்ட்ரிய ஜனதா தளத் தலைவருமான லாலு பிரசாத் யாதவை அவரது இல்லத்துக்குச் சென்று சந்தித்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "லாலு பிரசாத் யாதவ் மீது எனக்கு மிகப் பெரிய மரியாதை இருக்கிறது. அவரை சந்தித்தது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. ஏழ்மைப் பின்னணியில் இருந்து வந்தவர். சிறையில் அடைத்ததால் அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டு தொடர் மருத்துவ சிகிச்சை பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. பாஜகவை எதிர்கொள்வதற்கு ஏற்ற வலிமையுடன் லாலு பிரசாத் தற்போது இருக்கிறார்" என்று தெரிவித்தார்.

அப்போது, மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக காங்கிரஸ் கட்சியும் இடதுசாரிகளும் உள்ள நிலையில், நாடாளுமன்றத் தேர்தலின்போது எவ்வாறு கூட்டணி அமைப்பீர்கள் என்றும், டெல்லி அரசின் அதிகாரத்தைப் பறிக்கும் மத்திய அரசின் அவசரச் சட்டம் விவகாரத்தில் ஆம் ஆத்மி கட்சிக்கு எதிர்க்கட்சிகள் கூட்டத்தில் ஆதரவு கிட்டாவிட்டால் வெளிநடப்பு செய்வோம் என அக்கட்சி மிரட்டுவது குறித்தும் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதில் அளித்த மம்தா பானர்ஜி, "நாளை என்ன நடக்கும் என்பதை நான் சொல்ல முடியாது. ஆனால், பாஜகவுக்கு எதிராக நாங்கள் அனைவரும் ஒரு குடும்பமாக இணைந்து நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வோம். பாஜகவை நேருக்கு நேர் சந்திப்போம்" என்று தெரிவித்தார்.

அரியலூர் மாவட்டத்தில் ரூ.3.88 கோடி மதிப்பீட்டில்

# பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை அமைச்சர் சிவசங்கர் துவக்கி வைத்தார்



அரியலூர் , ஜூன். 23- அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ரூ.3.88 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் நேற்று துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆனி மேரி ஸ்வர்ணா, தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு முதலமைச்சர் தமிழகத்தில் உள்ள பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி பொதுமக்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை போக்குவரத்துத்துறை அமைச்சர் துவக்கி வைத்தார்.

இதன்படி அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், இலங்கைசேரி கிராமத்தில் முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள இலங்கைசேரி கிராம சாலை அமைக்கும் பணியினை துவக்கி வைத்தும், அதனைத்தொடர்ந்து கீழமாளிகை கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிதிட்டத்தின் கீழ் ரூ.9.08 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கீழமாளிகை அங்கன்வாடி கட்டடத்தினையும் திறந்து வைத்தார். மேலும் அங்கன்வாடிக்கு வருகை தந்த குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கி அவர்களை வரவேற்றார்.

மேலும், மத்துமடக்கி கிராமத்தில் முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.2.53 கோடி மதிப்பீட்டில் வீராக்கன் முதல் பொன்பரப்பி வரை சாலை அமைக்கும் பணியினையும், அதனைத் தொடர்ந்து கழுமங்கலம் கிராமத்தில் முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1.6 இலட்சம் மதிப்பீட்டில் கழுமங்கலம் சாலை அமைக்கும் பணியினையும் துவக்கி வைத்தார். மேலும், முடிவுற்ற பணிகளை உரிய முறையில் பராமரிக்கவும், நடைபெறும் பணிகளை தரமான பொருட்களைக் கொண்டு முடித்து விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அமைச்சர் சிவசங்கர் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் இலக்குவன், அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபாகரன் (செந்துறை), முருகன் (ஜெயங்கொண்டம்), வட்டாட்சியர் பாக்கியம் விக்டோரியா மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டத்தில் இன்று நடைபெறவுள்ள, மாவட்ட திட்டமிடும் குழுவிற்கு புதிய உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான சாதாரண தேர்தல் தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஊராட்சி அலுவலகத்தில் கலெக்டர் மெர்சி ரம்யா நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# உலக யோகா தினத்தை முன்னிட்டு நற்சாந்துபட்டி மாணவர்களுக்கு யோகாசனப் பயிற்சி



புதுக்கோட்டை , ஜூன். 23- உலக யோகா தினத்தை முன்னிட்டு புதுக்கோட்டை, நற்சாந்துபட்டியில், உள்ள ஷண்முக விலாச கலாசாலையில், கல்வி பயிலும் மாணவர்களுக்கு, புதுக்கோட்டை, ஜெ.ஜெ. கலை, அறிவியல் கல்லூரி(தன்னாட்சி), வேதியியல் துறை சார்பாக, யோகாசன பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியை, நற்சாந்துபட்டி, பஞ்சாயத்து தலைவர், சிதம்பரம் செட்டியார் துவக்கி வைத்து தலைமை உரையாற்றினார். அவர்தம் உரையில், இன்றைய சூழலில் நம் அனைவருக்கும் மன அழுத்தமும், உடல் சோர்வும் அதிகமாக உள்ளது. எனவே அதை போக்க ஒரே வழி யோகா பயிற்சி மட்டுமே அது மட்டுமல்லாது நாம் தவறாமல் யோகா பயிற்சி செய்யும்போது நம்மை நோய் தாக்காது. நோயை எளிதில் வென்று விடலாம் எனவும் கூறினார். அடைக்கம்மை ஆச்சி அறக்கட்டளையின் தலைவர், சாத்தப்பன் செட்டியார் வாழ்த்துரையில், யோகாசனம் என்பது நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற வாழும் கலை ஆகும். இதை கடைப்பிடிப்பதினால் என்றும் இளமையாகவும், நோயற்ற வாழ்வையும் பெறலாம் எனக் கூறி, மாணவர்களாகிய நீங்கள் தினமும் இந்த யோகாசன பயிற்சியை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மாணவர்களுக்கு ஜெ.ஜெ.கலை, அறிவியல் கல்லூரி, வேதியியல் துறைத் தலைவர் முத்துக்குமார் யோகாசன பயிற்சிகளாகிய உட்கார்ந்து செய்யும் ஆசனங்கள் பத்மாசனம், வஜ்ராசனம், யோகமுத்ரா மற்றும் பரவத்தாசனம் ஆகியவற்றையும், குப்புறப் படுத்து கொண்டு செய்யும் ஆசனமாகிய, புஜங்காசனம் பற்றியும், நின்று கொண்டு செய்யும் ஆசனமாகிய பாதகஸ்தாசனம் மற்றும் திரிகோனாசனம் பற்றியும், மல்லாந்து படுத்துக்கொண்டு செய்யும் சாவாசனம் பற்றியும், மூச்சுப் பயிற்சி, தியானம் மற்றும் உணவு முறைகள் பற்றியும் தெளிவாக விளக்கினார். முன்னதாக, பள்ளி தலைமை ஆசிரியை தையல்நாயகி வரவேற்புரையும், இறுதியில் அறக்கட்டளையின் மேலாளர் குகனேஸ்வரி நன்றியுரையும் ஆற்றினர்.



விஜய் மக்கள் இயக்கத்தின் தலைவர் நடிகர் விஜய் 49வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட கிழக்கு ஒன்றியம் தளபதி விஜய் மக்கள் சார்பில் கர்ப்பிணி பெண்கள் பயன்பெறும் வகையில் சக்கிமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் குருதிக்கொடை அளித்தனர். இந்நிகழ்வுக்கு மதுரை வடக்கு மாவட்ட தலைவர் விஜய் அன்பன் கல்லாணை சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ரத்ததான முகாமை தொடங்கி வைத்தார். மற்றும் நிகழ்வில் கிழக்கு ஒன்றிய துணைத் தலைவர் கோட்டைச்செல்வம், காசிநாதன்,வேலு, மயில்வாகனன், சதீஸ்குமார், நாகராஜ்,கணேசன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

# செந்தூரான் பாலிடெக்னிக் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் தொடக்க விழா



திருமயம், ஜூன். 23- புதுக்கோட்டையை அடுத்த லேணாவிளக்கில் அமைந்துள்ள செந்தூரான் பாலிடெக்னிக் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் தொடக்க விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு கல்லூரியின் முதன்மைச் செயல் அலுவலர் கார்த்திக் வரவேற்புரையாற்றுகையில். பள்ளி பருவம் முடிந்து கல்லூரி பருவத்திற்கு அடியெடுத்து வைத்துள்ள மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் போராதவரோடு இக்கல்லூரி இயங்குகிறது என்று வாழ்த்தி பேசினார். கல்லூரியின் தலைவர் செல்வராஜ், உபதலைவர் நடராஜன், நிர்வாக இயக்குனர் வயிரவன் மற்றும் மனிதவள இயக்குனர் மீனா வயிரவன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். கல்லூரி முதல்வர் செல்வராஜ் அறிமுகவுரையாற்றினார்.

கல்லூரி முதல்வர், தொழில்நுட்பக் கல்லூரியின் சிறப்பை மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். வேலை வாய்ப்பு நிறுவனங்களைப் பற்றி மாணவர்கள், பெற்றோர்களுக்கு தெளிவாக எடுத்துறையாற்றினார். அனைத்துமுதலாம்ஆண்டு விரிவுரையாளர்களை அறிமுகம் செய்து வைத்து அவர்களை கௌரவப்படுத்தினார். இவ்விழாவில் ஆலங்குடி வெள்ளைச்சாமி "நீ பயந்தாலும் ஓடும், பணிந்தாலும் ஓடும்" துணிந்தால் மட்டுமே உன் பின்னால் ஓடி வரும் காலம் என்று அழகான கவிதை வரிகளோடு தன் உரையை தொடங்கினார். முதலில் பெற்றோர்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். நம்மை நாம் உணர்தலின் தான் வெற்றி கிட்டும் என்பதை பல சுவாரஸ்ய கதைகளை சொல்லி மாணவர்களுக்கு உற்சாகமளித்தார்.

பின், மிகச் சிறந்த சேவை விவசாயம் முதலிடம் என்றால், இரண்டாவது சேவை தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் துறை என்று கூறி அதற்கு சான்றாக 2000 வருடங்களுக்கு முன்னதாக கட்டப்பட்ட கல்லணையே இதற்கு சான்று என்றார். வாழ்க்கையை எப்படி நேர்மறையான எண்ணங்களோடு எதிர்கொள்வது நமக்கான விஷயங்களை எப்படி தேர்ந்தெடுப்பது மற்றும் மாணவர்கள் எப்படி படித்தால் சாதிக்க முடியும் என்பதை பல உன்னத கதைகளோடு ஒப்பிட்டு மாணவச் செல்வங்களுக்கு உரையாற்றினார். "ஒரு முறை வந்தால் அது கனவு, இரு முறை வந்தால் அது ஆசை, பலமுறை வந்தால் அது இலட்சியம்" என்று அப்துல்கலாம் ஐயா சொன்னதைக் நினைவுபடுத்தி, கல்லாக இருப்பவர்களை கூட சிற்பமாக மாற்றும் இக்கல்லூரி என கல்லூரி பெருமையை உணர்த்தி, மாணவர்களை நல்லடக்கத்துடன் உங்களுக்கான திறமைகளை படிக்கும் காலத்தில் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று மாணவர்களை வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் செயலர் தியாகராஜன் , தாளாளர் ராமையா , செயல் இயக்குனர் பாண்டிகிருஷ்ணன் அவர்கள் மற்றும் கல்லூரி நிர்வாகிகள், ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர். இறுதியாக முதலாம் ஆண்டு துறைத்தலைவர் மூத்த ஆசிரியை சூரியகலா நன்றியுரை வழங்கினார்.



சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், அத்தனூர்பட்டி ஊராட்சியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பு திட்ட முகாமில் பல்வேறு அரசு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்கினை கலெக்டர் கார்மேகம் பார்வையிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் மேனகா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் சட்டம் ஒழுங்கு, மணல் கடத்தலை தடுத்தல், போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு, போதைப்பொருள் தடுப்பு தொடர்பான ஆய்வு கூட்டம் கலெக்டர் பிரதீப் குமார் தலைமையில் நேற்று நடைபெற்றது. அருகில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜித் குமார், மாநகர காவல் துணை ஆணையர்கள் அன்பு, செல்வகுமார் மற்றும் காவல் துறையினர் அரசு துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# பிரதமரின் அமெரிக்க பயணம் இருதரப்பு உறவை மேலும் ஆழப்படுத்தும்: வெள்ளை மாளிகை

# வள்ளலார் குறித்த ஆளுநரின் கருத்துக்கள் முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டியவை





# ஆலங்குடியில் டாஸ்மாக் கடை மூடல் மாலை அணிவித்து பட்டாசு வெடித்த பொதுமக்கள்

சென்னை / புதுக்கோட்டை | 23.06.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

23.06.2023 வெள்ளி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ராஜகோபால தொண்டைமான் , புதுக்கோட்டை சமத்தான அரசர் (பி.1922) (இ.1997)



திரிபுவன் வீர விக்ரம் ஷா , நேபாள மன்னர் (பி.1906) (இ.1955)



வீரபத்ர சிங் , இந்திய அரசியல்வாதி (பி.1934)



## இன்றைய நினைவு நாள்

கிஜுபாய் பதேக்கா , இந்தியக் கல்வியாளர் (பி.1885) (இ.1939)



சியாமா பிரசாத் முகர்ஜி , இந்தியக் கல்வியாளர், அரசியல்வாதி (பி.1901) (இ.1953)



சிறீ பிரகாசா , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், நிர்வாகி (பி.1890) (இ.1971)



## பன்னாட்டுக் கைம்பெண்கள் நாள்